# *புனித உல்வ்ரான் (-720)*

இவர் ஒரு மன்னரின் அரண்மனையில் வாழ்ந்தாலும் புண்ணிய வாழ்வு நடத்தினார். உலக இன்ப சுகங்கள் தம்மை இழுக்க இவர் விட்டு விடவில்லை. இவரை பேராயராக ஆக்கினார்கள். இவரது காலத்தில் இங்கிலாந்திலிருந்து பல வேதபோதகர்கள் பிரீஸ்லாந்து நாட்டுக்குச் சென்று வேதம் போதித்து, விக்கிரக ஆராதனை செய்து வந்த மக்களை கிறிஸ்தவராக்கினார். இதனைக் கண்ட நம் புனிதர் தம் பதவியைத் துறந்து ஒரு சந்நியாச மடத்துக்குப் போய் ஞான ஒடுக்கம் செய்த பின்னர் வேதம் போதிக்கும்படி பிரீஸ்லாந்து நாட்டுக்குச் சென்றார். அங்கு அனேகரை மனந்திருப்பினார். பல ஆண்டுகளாக அங்கே உழைத்த பின், முன்னால் ஞான ஒடுக்கம் செய்த மடத்திற்கு போய் தம்மை சாவுக்குத் தயாரித்தார்.

**சிந்தனை:**

உலக இன்ப சுகங்கள் நம்மை இழுக்க விட்டு விடக்கூடாது.

**செபம்:**

ஆண்டவரே, அநேகரை எங்கள் செபத்தாலும் தவத்தாலும் உம்மிடம் கொண்டு வர வரம் தாரும்.